**மடுள்ள பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மடுள்ள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மடுள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 <u>கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)</u>

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட ரூபா 22,151,766 பெறுமதியான 03 திட்டங்களின் கூட்டுத்தொகை நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் இனம் காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட பெறுமதியான 02 திட்டங்களின் நிறைவுற்ற வேலைகளின் பெறுமதி ரூபா 1,893,480 ஆகவிருந்த போதும் அது ரூபா. 1,179,454 என ரூபா. 714,026 குறைவாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் இனம் காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்களின் பெறுமதி ரூபா. 1,101,612 ஆகவிருந்த போதும் அது ரூபா. 950,379 என ரூபா. 151,233 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட 01 காரியாலய கபட் மற்றும் 01 அலுமாரி ஆகியவற்றின் பெறுமதியாகிய ரூபா 46,799 தளபாடங்கள் உபகரணங்களின் கீழ் மற்றும் காரியாலய உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று தகனசாலையில் காணப்பட்ட ரூபா. 36,231 | எதிர்காலத்தில் அவ்விருப்பு மீதியினை | இறுதி இருப்பு சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | ஆகவிருந்த எரிவாயு இருப்பின் பெறுமதி எஞ்சிய இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக இருப்புப் பட்டியல்களில் உள்ளடக்குவதாக | கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று நீர் களஞ்சியத் தொகை ரூபா. 364,210 ஆகவிருந்த போதும் அது ரூபா. 513,400 என ரூபா. 149,190 கூடுதலாக எஞ்சிய தொகையினுள் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | இறுதி இருப்பு சரியாதக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டில் முத்திரை கட்டண வருமானம் ரூபா. 4,268,145 ஆகவிருந்த போதும் அது ரூபா. 4,170,085 என ரூபா. 98,060 குறைவாக நிதிச் செயற்பாட்டுக் கூற்றிலும் திசம்பர் 31 ஆம் திகதியன்று கிடைக்க வேண்டிய முத்திரைக் கடட்டண வருமானம் ரூபா. 4,734,211 ஆகவிருந்த போதும் அது ரூபா. 4,634,211 என ரூபா. 100,000 குறைவாக நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டினுள் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா. 27,657,162 நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனப் பெறுவனவுகளின் கீழ் காட்டப்படாத அதேவேளை அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 28,400,126 செலவானது நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும |
| (ஐ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை கடை வாடகை தண்டப்பணம் ரூபா. 174,335 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும |
| (ஒ) | மீய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று செலவினக் கடன் கொடுத்தோர் மற்றும் நிர்மாணக் கடன் கொடுத்தோருக்காக | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீர் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூபா. 62,132 மற்றும் ரூபா. 234,055 கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செய்வதாக | வேண்டும |

**1.6.2 <u>கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 263,901,547 ஆகவிருந்த 03 சொத்து விடயங்கள் தொடர்பான உரிமைப் பத்திரம், தொழில்சார் மதிப்பீட்டாளர் அறிக்கை மற்றும் நிலையான சொத்து பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக முனைப்பழிவு செய்ய முடியாதிருந்தது | அனைத்து காணிகளையும் மதிப்பீடு செய்து கொள்வதற்கும் காணிகளுக்கான உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் நிலையான சொத்து பட்டியலை காலதுவரையாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலைப்பாட்டினை உறுதி செய்வதற்கு தேவையான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |

**1.7 <u>இணக்கமின்மைகள்</u>**

**1.7.1 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்</u>**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களைக் கடந்திருந்த ரூபா. 95,000 பெறுமதியான 03 வைப்பு மீதிகள் விடுவித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை | 2024 இல் இம் மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களுக்க மைய செயற்படுவதாக | நிதிப் பிரமாணங்களுக்க மைய செயற்படுதல் வேண்டும் |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 83(1) பிரிவு | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 வரை அனுமதிக்கப்பட்டிருந்த 106 கட்டிட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இந் நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்துவதாக | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் |

## 02. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,961,436 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 3,002,306 ஆக இருந்தது.

### 2.2 <u>வருமான நிர்வாகம்</u>

#### 2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 575,000 | 202,200 | 202,200 | - | 194,400 | 226,500 | 226,500 | - |
| (ii) | வாடகை | 13,965,673 | 12,780,240 | 12,291,990 | 488,250 | 6,658,931 | 7,048,711 | 6,643,167 | 405,544 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 760,060 | 373,767 | 465,250 | - | 699,400 | 254,027 | 255,176 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 16,729,790 | 10,634,696 | 6,009,254 | 4,625,442 | 15,266,900 | 10,851,502 | 7,969,816 | 2,881,685 |
| | | 32,030,523 | 23,990,903 | 18,968,694 | 5,113,692 | 22,819,631 | 18,380,740 | 15,094,659 | 3,287,229 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுடன் தொடர்பான சபைக்குச் சொந்தமான 03 சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 89,830 ஆகிய வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா. 434,900 ஆகவிருந்த கடை வாடகை வருமானத்தில் ரூபா. 239,500 அதாவது 55 வீதம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா. 317,912 ஆகவிருந்த நிலுவை கடை வாடகை வருமானத்தில் ரூபா. 263,962 அதாவது 83 வீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**<u>அனுமதிப்பத்திரக் கட்டணம்</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குச் சொந்தமகன 23 கடைகள் மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அக் கடைகளுக்காக வியாபார அனுமதிப்பத்திரமோ அல்லது வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2024இல் இந் நடவடிக்கைகளை சீர் செய்வதாக | வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் வியாபார வரி அறவிடல் முறைப்படுத்தப்படல் வேண்டும். |

**<u>வேறு வருமானங்கள்</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 – 2023 காலப்பகுதியுடன் தொடர்பான நீர் வாடிக்கையாளர்கள் 173 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 468,037 ஆகவிருந்த நிலுவை நீர்க் கட்டணம் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2017 – 2022 காலப்பகுதியுடன் தொடர்பான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுதல் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,392,360 ஆகவிருந்த நிலுவை வரி வருமானம் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (இ) மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 104.375 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 4,636,150 டிபறப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) உப விதிக்கோவைகள்** | | |
| 2022 நவம்பர் 25ஆம் திகதிய 2308ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் தாமரைக் குள வள்ள சேவை, சிறுவர் பூங்கா மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடம் ஆகியவற்றுக்கு கட்டணம் அறவிடுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், அதற்கான உப விதிக்கோவைகளை இயற்றவோ அல்லது நடைமுறையிலுள்ள உப விதிக்கோவைகளை ஏற்றுக்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உப விதிக்கோவைகளை இயற்றி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் உப விதிக்கோவைகளை இயற்றி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) நீர்த் திட்டங்கள்** | | |
| கஹகொல்ல புலத்வெல் ஆர மற்றும் மாகந்தாஓய ஹகிரில்ல நீர்த் திட்டங்களில் நீரை சுத்திகரித்தலோ அல்லது குளோரின் இடுதலோ செய்யப்படாதிருப்பதுடன் 2020 திசம்பர் 31ஆம் திகதியின் பின்னர் நீர் மாதிரிகள் தொடர்பில் தரப் பரிசோதனை அறிக்கை | நீர் மாதிரிகளை பரிசோதித்தல் மற்றும் குளோரின் இடுதல் என்பவற்றுக்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டு வருவதாக | அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்கள் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டம். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | **<u>திண்மக் கழிவு முகாமைத்துவம்</u>** | | |
| (i) | புதிய கொம்போஸ்ட் திட்டத்திற்காக மொனராகலை வனப் பிரதேசத்தின் கல்பொக்கை வனப் பாதுகாப்பு வலயத்திற்குச் சொந்தமான லுனுதிப்பாஹெல காட்டுப் பிரதேசத்திலுள்ள கிரிஎல்லை எனும் இடத்தில் 02 ஏக்கர் பரப்புள்ள காணி தெரிவுசெய்யப்பட்டு ரூபா. 595,977 செலவில் பிரவேசப் பாதையொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் அக் காணியை சபைக்கு கையேற்று கொம்போஸ்ட் திட்டத்தினை ஆரம்பித்திருக்கவில்லை. | தற்பொழுது குறித்த காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் கொம்போஸ்ட் திட்டத்தினை ஆரம்பித்து இப் பிரவேசப் பாதையினை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும் |
| (ii) | பிரதேச சபையின் மூலம் திண்மக் கழிவு அலகிற்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | விரைவில் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | திண்மக் கழிவு அலகிற்கான சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |
| (ஈ) | **<u>சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்</u>** | | |
| | சபையினால் வழங்கப்பட்டிருந்த சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் கடந்திருந்த 04 அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காமை மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்பான இனங்காணப்பட்ட 08 தொழில் முயற்சிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்காமை ஆகிய காரணங்களால் ரூபா. 48,000 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. அதேபோன்று | இத் தொழில் முயற்சிகள் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் அனுமதிப்பத்திர வினியோகத்திற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருவதாக | அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள தொழில் முயற்சிகள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| அதிகாரப் பிரதேசத்திலுள்ள தொழில் முயற்சிகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

3.2 **<u>செயற்பாட்டு வினைத்திறனின்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட 04 விபத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா. 83,130 தொகையினை வகை கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காப்புறுதி நிறுவனத்தின் மூலம் முழுமையான காப்புறுதித் தொகை செலுத்தப்படாததன் காரணமாக எஞ்சிய தொகையினை சபை நிதியிலிருந்து செலுத்த வேண்டி ஏற்பட்டதாக | சபைக்குச் சொந்தமான சொத்துகளுக்கு சேதம் ஏற்படுமிடத்து நட்டத்தினை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

3.3 **<u>செயற்பாட்டு வினைத்திறனின்மை</u>**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் மூலம் 2021 மே மாதம் அபிவிருத்தி அடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும், 1987இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) பிரிவின் பிரகாரம் வீதவரி மற்றும் வரி மதிப்பீடு செய்யப்பட்டு வரி அறவிடல் 2024 பெப்ரவரி இறுதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந் நடவடிக்கைகளை விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மடுல்ல பிரதேச சபையின் மூலம் கடைகளை வாடகைக்கு விடுதல் தொடர்பாக வெளியிடப்பட்ட விலைமனுக் கொரல் கடிதத்தில் மீளச் செலுத்தப்படாத முற்பணத் | குறித்த நிலுவைகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வாடகை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை 05 வருட காலத்தினுள் மாதாந்த தவணைக் கொடுப்பனவு அடிப்படையில் செலுத்த வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்த போதும், சபைக்குச் சொந்தமான 14 கடைகளிலிருந்து ரூபா. 1,734,997 தொகை 01 மாதம் முதல் 27 மாதங்கள் வரை அறவிடப்படாமலிருந்தது. | | |
| (இ) | மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான புதிய பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள 02 கடைகள் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படாது இலங்கை போக்குவரத்து சபையினதும் மற்றும் வீதிப் பொக்குவரத்து அதிகார சபையினதும் அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்தன. இக் கடையொன்றிற்காக மதிப்பிடப்பட்ட மாதாந்த வாடகை ரூபா. 1,200 ஆகவிருந்ததுடன் 2023 ஆகஸ்ட் மாதம் வரையில் ரூபா. 156,000 வாடகை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையை அறவிடுவதற்காக குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது டன் விரைவில் அத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வாடகை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மடுல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான புதிய பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள 04 கடைகள் 2016ஆம் ஆண்டின் பின்னர் வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | வாடகைக்கு விடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாக | கடைகளை வாடகைக்கு விட்டு வாடகை வருமானத்தை அறவிடல் வேண்டும் |
| (உ) | மகுல்ல பழைய பேரூந்து தரிப்பிடத்தில் கீழ் மாடியில் அமைந்துள்ள ஒரு கடையினை வாடகைக்குப் பெற்ற வாடகைதாரர் கடையை பெற மறுப்புத் தெரிவித்திருந்ததுடன், பொதுச் சபையின் இணக்கத்தின் பேரில் வேறொருவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. பழைய | குறித்த வாடகைதாரரிடம் ஒப்பந்தப் பிணை வைப்புத் தொகை மற்றும் விலைமனு பிணை வைப்புத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடும்போது அது தொடர்பான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| வாடகைதாரரின் விலைமனு பிணை வைப்புத் தொகை சபையின் வருமானத்தில் வரவு வைக்கப்படாதிருந்ததுடன் புதிய வாடகைதாரரிடம் ஒப்பந்தப் பிணை வைப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பதாக | வேண்டும். |
| (ஊ) பிரதேச சபைக்குச் சொந்தமான மகுல்ல பழைய பேரூந்து தரிப்பிடத்தில் மேல் மாடியில் அமைந்துள்ள ஒரு கடையினை வாடகைக்குப் பெற்றிருந்த வாடகைதாரர் பொதுச் சபையின் இணக்கத்தின் பேரில் வேறொரு வாடகைதாரருக்கு கைமாற்றம் செய்திருந்த போதும் புதிய வாடகைதாரருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், ஒப்பந்தப் பிணை வைப்புத் தொகையினைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் கைமாற்றலலுடன் தொடர்பான கட்டணங்களைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் கைமாற்றலுடன் தொடர்பான கைமாற்றல் கட்டணத்தை அறவிடுவதற்கும் மற்றும் ஒப்பந்தப் பிணை வைப்புத் தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு விடும்போது அது தொடர்பான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) பிரதேச சபைக்குச் சொந்தமான கேட்போர் கூடத்தின் சில பீலிகள் கழன்றிருந்ததுடன் விராந்தைக்கு செல்லும் படிக்கு மேலால் அமைந்துள்ள சிவிலின் மழை நீர் ஒழுகல் காரணமாக உக்கலடைந்துகொண்டிருந்தது. | விரைவில் திருத்த வேலைகளை மேற்கொள்வதாக | திருத்த வேலைகளை விரைவில் மேற்கொள்ளல் வேண்டும் |
| (ஆ) தம்பகல்லை பொலிஸ் விடுதிக்குப் பக்கத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 20 பேர்சஸ் | தற்பொழுது இக் காணியை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கர்ணியின் சட்டரீதியான உரிமையினை சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பரப்புள்ள காணியில் வெளி நபர் ஒருவரினால் சட்ட விரோதமாக வீடொன்று அமைக்கப்பட்டு அங்கு வசித்து வருவதாக 2022ஆம் ஆண்டு கணக்காய்வின் பொது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி வரை அக் காணியை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கையேற்றல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான காணியென ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா விடுதி அமைக்கப்பட்டுள்ள காணியின் சட்டரீதியான உரிமை 2024 பெப்ரவரி 14 வரை சபைக்கு கையேற்கப்படாதிருந்ததுடன் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரிமையினை கையேற்றல் பாதுகாப்பு வேலி அமைத்தல் நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் திட்டமிடுவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்டரீதியான உரிமை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும். |
| (ஈ) | இகினியாகலை பொது நூலகக் கட்டடத்தின் ஒரு பகுதியினை மறைத்து வெளித் தரப்பினரால் நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்ட விரோத கட்டடங்கள் 2024 பெப்ரவரி வரை அகற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும். |
| (உ) | நாகவிமன யாய மற்றும் தெலிவ ஆகிய இரண்டு மயான பூமிகளில் வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த சட்டவிரோத நிர்மாணங்கள் 2024 பெப்ரவரி வரை அகற்றப்பட்டு குறித்த மயான பூமிகளின் சட்டரீதியான உரிமை பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கந்தகெடிய பிரதேச சபைக்குச் சொந்தமான மோட்டர் கிரேடர் இயந்திரம் சுமார் 04 வருட காலமாக மடுல்ல பிரதேச சபையின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அதனை 2024 பெப்ரவரி மாதம் வரை சபைக்கு கையேற்பதற்கோ அல்லது கந்தகெடிய பிரதேச சபைக்கு கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வியந்திரத்தின் உரிமையினை சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரிமையினை உறுதி செய்தல் வேண்டும். |
| (எ) | சபைக்கு சொந்தமான கப் வண்டியின் என்ஜின் இலக்கத்திற்கும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள என்ஜின் இலக்கத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான வாகனங்களின் பதிவு நடவடிக்கைகள் தீர்க்கப்படல் வேண்டும் |
| (ஏ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 02 வானங்களின் சட்டரீதியான உரிமை பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை | வானங்களின் சட்டரீதியான உரிமையினை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான வாகனங்களின் சட்டரீதியான உரிமை கையேற்கப்படல் வேண்டும் |
| (ஐ) | சபைக்கு சொந்தமான 05 நூலகங்களின் வாசகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 126,149 பெறுமதியான 466 நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதி வரை மீளப் பெறப்பட்டிருக்கவில்லை. | இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக | வாசகர்களுக்கு வழங்கப்பட்ட நூலகப் புத்தகங்கள் மீளப் பெறப்படல் வேண்டும் |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) புல் வெட்டும் இயந்திரங் களுக்கான கத்தி கொள்வனவின் போது குறைந்த விலையினை சமர்பித்த நிறுவனத்திற்குப் பதிலாக வேறு நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக சபை நிதிக்கு ருபா. 16,200 நட்டம் ஏற்பட்டிருந்தது. | குறித்த தனியார் நிறுவனத்திடமிருந்து அத் தொகையினை எதிர்காலத்தில் அறவிட்டுக்கொள்வதாக | அரசிற்கு மிக குறைந்தளவு பாதிப்பு ஏற்படும் விதத்தில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஆ) 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் திறந்த விலை கோரலின் போது பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்ற அதேவேளை சபையின் சொத்துக்களை வாடகைக்கு விடுவதற்காக விலைமனுக் கோரப்படும் சந்தர்ப்பங்களில் மொனராகலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நிறுவனங்கள் அல்லது நிலையான வசிப்பிடத்தைக் கொண்ட தனிப்பட்ட பதிவுதாரர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 19,795 தொகை பயனற்ற செலவீனமாக காணப்பட்டது. | எதிர்காலத்தில் இச் செயற்பாடுகளை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுகை செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று சபையின் 03 பதவிகளுடன் தொடர்பான 04 உத்தியோகத்தர்களுக்கான குறைபாடும் 03 பதவிகளுடன் தொடர்பான 17 உத்தியோகத்தர்களுக்கான மேலதிகமும் காணப்பட்டது. | குறைபாடுள்ள மற்றும் மேலதிக உத்தியோகத்தர்கள் தொடர்பில் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக | உத்தியோகத்தர் குறைபாடுகள் பூரணப்படுத்தப்பட வேண்டியதுடன் மேலதிக உத்தியோகத்தர்களுக்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டம். |

## 4 கணக்களி தன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை, ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 8 வருமானத் தலைப்புகளின் 2 சதவீதம் முதல் 98 07 செலவுத் தலைப்புகளின் 8 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான விலகல்கள் காணப்பட்டன. இதனடிப்படையில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் முறையாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளை மேலும் தாத்வீகமாக தயார் செய்து அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திண்மக் கழிவு அலகின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வகையில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படாமை காரணமாக வெளித் தரப்பினரால் பல்வேறு கழிவுகள் அவ்விடத்தில் கொட்டப்பட்டிருந்தன. | திண்மக் கழிவு அலகிற்கான பாதுகாப்பு வேலியினை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் |